7th July 1962]

MR. SPEAKER: On Tuesday?

SRI M. KALYANASUNDARAM: Yes, Sir.

MR. SPEAKER: Very well.

III. ELECTION TO THE BOARD OF INDUSTRIES.

THE HON. SRI R. VENKATARAMAN: Mr. Speaker, Sir, I beg to move—

'That in order to represent the Madras Legislative Assembly on the Board of Industries, this Assembly, in accordance with section 3 (1) (*b*) of the Madras State Aid to Industries Act, 1922 (Madras Act V of 1923) and rule XXII (2) of the Madras Small Scale and Cottage Industries Loans and Subsidy Rules, 1956, do proceed on a date to be fixed by the Speaker to elect two representatives on the Board of Industries constitued under the Act'.

திரு. மீ. கல்யாணசுந்தரம்: இந்தத் தீர்மானத்தின்மீது இரண்டொரு வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். வோட்டுக்கு விடுவதற்கு முன்பாக அதன்மீது அங்கத்தினர்கள் பேசுவதற்கு உரிமை உண்டு . . .

MR. SPEAKER: Yes, the hon. Member may speak on the motion which is before the House for discussion.

திரு. மீ. கல்யாணசுந்தரம்: கனம் சபாநாயகர் அவர்களே, இந்தத் தீர்மானத்தை நான் வரவேற்கிறேன். அதே சமயத்தில் சில யோசனைகளையும் கவனிக்க வேண்டும் என்று சம்பந்தப்பட்ட கனம் அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். இந்தத் தீர்மானம் அரசாங்கம் தொழிலாளர்களுக்கு உதவி செய்யும் சட்டத்தின் கீழ் ஓர் ஆலோசனை போர்டை (ஸ்டேட் இன்டஸ்ட்ரீஸ் போர்ட்) அமைத்திருக்கிறது. அந்த போர்டுக்கு நம்முடைய சபையின் சார்பாக இரண்டு அங்கத்தினர்களைத் தேர்ந்தெடுத்து அனுப்ப சட்டப்படி நமக்கு உரிமையிருக்கிறது. இந்தச் சட்டம் இயற்றப்பட்டு விதிகள் பிறப்பிக்கப்பட்டது எல்லாம் இரண்டாவது உலக யுத்தத்திற்கு முன்னதாக. அப்போது தொழில் வளர்ச்சிக்கு இருந்த கண்ணோட்டம் வேறு, இப்போது தொழில் வளர்ச்சியில் இருக்கின்ற கண்ணோட்டம் வேறு. இந்தச் சட்டத்தினுடைய நோக்கம் குடிசை கைத்தொழில்கள், கிராம கைத்தொழில்கள் இவைகளுக்கு எல்லாம் ஊக்கம் கொடுத்து, அவைகள் வளர வேண்டும் என்பது. சிறு உற்பத்தியாளர்கள் பெரும் உற்பத்தியாளர்களோடு போட்டி போடாமல், தப்பிப் பிழைக்க உதவி செய்யக்கூடிய வகையிலும் இந்த போர்ட் உதவிக் கொண்டிருக்கிறது. தனிப்பட்ட பெருந்தொழில்கள் வளர்ச்சியடைந்திருந்தாலுங்கூட, சிறு உற்பத்தியாளர்களுக்குப் பாதுகாப்பு அளிக்கவேண்டியது நம்முடைய கடமையாகும். இந்த அரசாங்கத்தினுடைய கடமையாகும். அந்த நோக்கத்துடன் இந்த போர்ட் நடக்க வேண்டும் என்பது என் ஆலோசனை. ஆனால் இப்போது இந்த போர்டிற்கு இந்தச் சபையிலிருந்து இரண்டு அங்கத்தினர்கள் தேர்ந்தெடுத்தாலுங்கூட, நடைமுறையில் பார்த்தால் அவர்கள் பூராக் காலமும் அங்கத்தினர்களாக இயங்க முடிவதில்லை. காரணம் இந்தப் புது சபை தோன்றியது அல்லது

[திரு. மீ. கல்யாணசுந்தரம்] [7th July 1962

9-30 a.m. ஆரம்பித்தது மார்ச் மாதம் இரண்டாம் தேதி. புதிய சட்ட சபை தோன்றியவுடனேயே இந்தச் சட்ட சபையின் பிரதிநிதிகளாக இந்த ஆலோசனைக் குழுவில் இருக்கிறவர்கள் அங்கத்தினர்களாக இருக்கமாட்டார்கள். புதிய சட்ட சபையின் அங்கத்தினர்களாக இருந்தாலுங்கூட அந்த ஆலோசனைக் குழுவில் அங்கத்தினர்களாக இருக்க முடியாது. மறுபடியும் சட்ட சபை தேர்ந்தெடுத்து அனுப்பினால்தான் அங்கத்தினர்களாக இருக்க முடியும். ஆகையால் ஒவ்வொரு பொதுத் தேர்தலுக்குப் பிறகும் இந்தச் சட்டசபையின் பிரதிநிதிகள் அந்த ஆலோசனைக் குழுவில் இருக்க முடியாது. சட்ட சபைப் பிரதிநிதிகள் இல்லாமலேயே இயங்க வேண்டிய நிலை ஒவ்வொரு பொதுத் தேர்தலுக்குப் பிறகும் ஏற்படுகிறது. ஒரு அங்கத்தினரின் பதவிக் காலம் மூன்று வருஷம் என்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. இப்போது கனம் அமைச்சர் தீர்மானம் கொண்டுவந்திருக்கிறார். தேர்தல் நடந்து, வெற்றி பெற்றவர்களுடைய பெயர் கெஜெட்டில் பிரசுரமாகி அதன் பிறகு அவர்களுடைய பதவிக் காலம் ஆரம்பமாகிறது. அந்த அங்கத்தினர்கள் மூன்று வருஷ காலம் பதவி வகிப்பார்கள். மறுபடியும் தேர்தல் நடைபெறும். அந்தத் தேர்தலில் வரக் கூடிய பிரதிநிதிகள் குழுவில் எத்தனை காலம் இருக்க முடியும்? அதற்குள் பொதுத்தேர்தல் வந்துவிடும். அங்கத்தினர்களுடைய பதவிக் காலமும் தீர்ந்துவிடும். ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு முறை தேர்தல் இருப்பதாலும், பதவிக் காலம் மூன்று வருஷம் என்று இருப்பதாலும், ஒவ்வொரு பொதுத் தேர்தல் நடந்த பிறகும் சபையின் பிரதிநிதிகள் இல்லாத ஒரு சூழ்நிலை இருக்கிறது என்று கனம் அமைச்சர் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். ஆகவே, இந்த பதவிக் காலத்தை மாற்றவேண்டும் என்பது என்னுடைய அபிப்பிராயம். பதவிக் காலம் ஒரு ஆண்டு என்று இருக்கவேண்டும் என்பதும் என்னுடைய அபிப்பிராயம். அல்லது பொதுத் தேர்தலுக்குப் பிறகு பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுத்து அனுப்பும் வரையில் இடைக் காலத்தை நிரப்புவதற்கு அதிகாரம் இருக்கவேண்டும். இந்தச் சபையின் அங்கத்தினராக தேர்ந்தெடுக்கப்பட்டவர்களிலிருந்து அங்கத்தினர்களை நியமிக்க அரசாங்கம் அதிகாரம் எடுத்துக்கொண்டு இந்தக் காலத்தைப் பூர்த்தி செய்யலாம் என்பது என்னுடைய யோசனை இதையும் கனம் அமைச்சர் அவர்கள் ஆலோசிக்கவேண்டும். இல்லாவிட்டால் பதவிக் காலத்தை ஒரு ஆண்டு காலமாக அல்லது இரண்டு ஆண்டு காலமாகக் குறைத்துவிட்டால் இந்தக் கோளாறு இல்லாமல் சமாளிக்க முடியும். ஆகையால் இந்தப் பதவிக் காலத்தைக் குறைக்க வேண்டும் என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அதோடு எண்ணிக்கையும் இரண்டு பேர்கள் என்று கொடுக்கப்பட்டிருக்கிறது. 207 அங்கத்தினர்கள் கொண்ட இந்தச் சபைக்கு இரண்டு பேர்கள் போதாது என்பது என்னுடைய அபிப்பிராயம். சிறு தொழில்கள் வளர்ச்சிக்கு, சபையில் இருக்கக்கூடிய எல்லாத் தரப்பினரும் ஆலோசனை கொடுக்கக்கூடிய வகையில், பங்கெடுக்கக் கூடிய வகையில் இருக்கவேண்டுமானால் இரண்டு அங்கத்தினர்கள் இருப்பது போதாது. பிரதிநிதித்துவம் மூன்று என்றாவது உயர்த்த வேண்டும் என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

7th July 1962] [திரு. மீ. கல்யாணசுந்தரம்]

கிராமத் தொழில்கள், குடிசைத் தொழில்கள் இவைகளுக்கு ஊக்கம் அளிக்க வேண்டும் என்று ஆண்டு ஒன்றுக்கு 20 லட்சம் ரூபாய் கடனாகக் கொடுக்க ஒதுக்கப்படுகிறது—செலவு செய்யப் பட்டும் வருகிறது. இதிலே ஆலோசனை கூறக் கூடியவர்கள் எப்படிப்பட்டவர்களாக இருக்கிறார்கள் என்று பார்த்தால் பெரிய தொழில் ஸ்தாபனங்களின் பிரதிநிதிகளிலிருந்து தேர்ந்தெடுக்கப் பட்டவர்கள். குடிசைத் தொழிலுக்குப் பிரதிநிதித்துவம் கொடுக்கவேண்டும் . . .

MR. SPEAKER : Is there any committee to look into the matter?

SRI M. KALYANASUNDARAM : No, Sir. I have to make my suggestion in this House, whenever I get an opportunity.

THE HON. SRI R. VENKATARAMAN : On a point of order, Sir. This is a motion merely to elect two members to the Board of Industries under the existing rules. If the hon. Member Sri M. Kalyanasundaram wants any change in the rules or modifications in procedure, either he should resort to the procedure of bringing a private motion or private Bill for the same or take up the question when the Demands for Grants of the concerned subject comes up before the House. This is not the occasion to raise other points. Government also will not be able to reply to all the points raised all of a sudden.

MR. SPEAKER : The question is . . . .

SRI M. KALYANASUNDARAM : I have not yet completed my speech, Sir.

MR. SPEAKER : The hon. Member has already taken sufficient time. I have with me a long list of members who want to speak. The hon. Member should finish his speech within a reasonable time. This is after all a simple motion to elect two members to the Board of Industries. The hon. Member has taken more than five minutes.

SRI M. KALYANASUNDARAM : I have taken little more than five minutes. I will finish in one or two minutes more. (laughter)

MR. SPEAKER : All right. The hon. Member can proceed and finish his speech soon.

திரு. மீ. கல்யாணசுந்தரம் : எனக்குச் சந்தர்ப்பம் கிடைக்கும் போது யோசனை சொல்லவேண்டி இருக்கிறது. இதற்கெல்லாம் கனம் அமைச்சர் உடனே பதில் கொடுக்கவேண்டும் என்று நான் கேட்கவில்லை. இலாகா அதிகாரிகள் இதைப் பற்றிப் பரிசீலிப்பார்கள், பிறகு வேண்டிய யோசனை கூறுவார்கள் என்று கருதுகிறேன். சட்டத் தையும், விதிகளையும், நான் கூறிய யோசனைகள் இடம் பெறக்கூடிய அளவுக்கு, திருத்தக்கூடிய முறையில் திருத்தங்கள் கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதோடு கனம் அமைச்சர் அவர்கள் சட்டப் புத்தகம் என்றவுடனே ஆலம் விழுது போன்று இருக்கிறது என்று தமாஷ் செய்வார்கள். சட்டப்

[திரு. மீ. கல்யாணசுந்தரம்] [7th July 1962

புத்தகத்தையும், விதிகளையும் பார்த்தால் அவ்வளவு திருத்தங்கள் இருக்கின்றன. சட்டத்தையும், விதிகளையும் சமீப காலத் திருத்தங்களோடு வெளியிடுமாறு யோசனை தெரிவித்துக்கொண்டு, என்னுடைய யோசனைகளை ஏற்றுக்கொள்ளவேண்டுமென்று கூறி இந்தத் தீர்மானத்தை ஆதரிக்கிறேன்.

MR. SPEAKER : The question is—

"That in order to represent the Madras Legislative Assembly on the Board of Industries, this Assembly, in accordance with section 3 (1) (*b*) of the Madras State Aid to Industries Act, 1922 (Madras Act V of 1923) and rule XXII (2) of the Madras Small Scale and Cottage Industries Loans and Subsidy Rules, 1956, do proceed on a date to be fixed by the Speaker to elect two representatives on the Board of Industries constituted under the Act".

The motion was put and carried.

MR. SPEAKER : In accordance with the regulations framed by me for the holding of elections according to the principle of proportional representation by means of a single transferable vote, I fix 11 a.m. on Tuesday the 10th July 1962 as the time within which nomination papers of candidates for election to the Board of Industries should reach the Secretary. Nomination forms can be had on application to the Secretary.

The nomination papers will be taken up for scrutiny at 1 p.m. on Tuesday, the 10th July 1962. I also fix 3 p.m. on Wednesday, the 11th July 1962 as the last hour and date for the withdrawal of candidature.

If the number of candidates nominated exceeds the number of seats to be filled, namely T.C.L., a poll will be taken on Thursday, the 12th July 1962 between the hours 9 a.m. and 1 p.m.

IV.—REVISED BUDGET FOR 1962-63—GENERAL DISCUSSION—*cont.*

* திரு. வி. கிருஷ்ணசாமி நாயுடு : கனம் சபாநாயகர் அவர்களே, கடந்த சில தினங்களாக நம்முடைய கனம் நிதி அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்துள்ள வரவு-செலவுத் திட்டத்தின் மீது இங்கு விவாதங்கள் நடைபெற்று வருவதைக் காண்கிறோம். நான் இந்த வரவு-செலவுத் திட்டத்தை முழு மனதுடன் ஆதரிக்கிறேன். இந்த வரவு-செலவுத் திட்டத்தை விருப்பு-வெறுப்பு இல்லாமல் பரிசீலனை செய்தால் நல்ல முறையிலே யோசனைகளைக் கூறுவதற்கு வழி இருக்கிறதேயன்றி குறைபாடுகள் இருக்கின்றன என்ற கண்ணோட்டத்தோடு குறை கூறிக்கொண்டிருப்பது என்றால் எவ்வளவு காலம் வேண்டுமானாலும் பேசிக்கொண்டு இருக்க முடியும். நம்முடைய நாடு ஜனநாயக நாடு. நாம் வகுத்துக் கொண்டுள்ள கொள்கை என்னவென்றால் நாடு ஒரு சோஷலிஸ சமுதாயமாக உருவாகவேண்டும் என்பது. ஒருசிலரைத் தவிர பெரும்பாலான அரசியல் கட்சிகள் இதை வரவேற்கின்றன. இதைத்தான் இந்த விவாதத்தின்போது காண்கிறோம். சோஷலிஸ சமுதாய அமைப்பிலே மக்கள் சோஷலிஸ அமைப்பைப் பற்றித் தெரிந்து கொண்டு, அந்த அமைப்பிலே தாங்கள் பிரஜைகளாக இருக்க தங்களை உருவாக்கிக்கொள்வதற்கான சந்தர்ப்பங்களையும்